ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2150/2 - 2019 නොවැම්බර් මස 18 වැනි සඳුදා - 2019.11.18
*2150/2 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேற்கோள் இல.: Kadu/Land/03/146/UDA.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 492, சுபூத்திபுர கிராம அலுவலர் பிரிவிலமைந்துள்ள பத்தரமுல்ல கிராமத்திற்காக (கடுவெல மாநகர சபை எல்லைக்குட்பட்ட) பொது நில அளவையாளரினால் 2019.10.03 இல் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. Co 9830 இல் காட்டப்பட்ட காணித்துண்டு 01 மற்றும் 02 ஆகிய இரு (02) காணித்துண்டுகளின் விஸ்தீரணம் 0.3221 ஹெக்டயார்கள் ஆகும்.

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: கொடெல்லவத்த அல்லது மில்லகஹவத்த மற்றும் கொட்டனுவேகும்புர; விபரம்: திறந்த கழிவு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: நகர அபிவிருத்தி அதிகார சபை; விஸ்தீரணம்: 0.0060 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**

காணியின் பெயர்: கொடெல்லவத்த அல்லது மில்லகஹவத்த மற்றும் கொட்டனுவேகும்புர; விபரம்: திறந்த கழிவு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: N. S. சௌவிரத்ன, புனித டோறா தனியார் வைத்தியசாலை, கொட்டாவ, பத்தரமுல்ல; விஸ்தீரணம்: 0.3161 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கடுவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏ. டி. வை. அனந்தனி,
பிரதேச செயலாளர்,
கடுவெல.

பிரதேச செயலகம்,
கடுவெல,
2019, நவெம்பர் 08.

12 - 04